# அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவின் மனைவி, மாமியார்மீது போதைப் பொருள் வழக்கு!

## முதல் பக்கத் தொடர்ச்சி

சென்னையில் இருந்து ரயில் மூலம் கடத்தி செல்லும் போது, மதுரை ரயில் நிலையத்தில் மத்திய போதை பொருள் தடுப்பு பிரிவு ரயிலில் அதிரடி சோதனை நடத்தி ரூ.150 கோடி மதிப் புள்ள 37.645 கிலோ மெத்தம்பெட்ட மைனை பறிமுதல் செய்தனர். இந்த வழக்கிலும் ஜான் பிரிட்டோ முக்கிய குற்றவாளி என மத்திய போதை பொருள் தடுப்பு பிரிவு விசாரணையில் தெரியவந்தது.

**தலைமறைவான ஜான் பிரிட்டோ?**

இப்படி கடத்தி வரும் போதை பொருட்களை சர்வதேச போதை பொருள் கடத்தல் மன்னன் ஜான் பிரிட்டோ ராமநாதபுரத்தில் ரெமிஸ் தான், ராமிஷ், ஜான்சான், பிரதாப் ஆகிய மீனவர்களுக்கு லட்சக்கணக் கில் பணம் கொடுத்து படகு உரிமை யாளர்கள் உதவியுடன் கடல் மார்க மாக இலங்கைக்கு போதை பொருள் கடத்த முயன்றது தெரியவந்தது. இந்த பணம் அனைத்தும் ஜான் பிரிட்டோ ஹவாலா மூலம் வரும் பணத்தை கொடுத்து தடையின்றி போதை பொருள் கடத்தி வந்தது விசாரணை யில் தெரியவந்தது. ஜான் பிரிட் டோவை கேரளா, குஜராத் மாநிலங்க ளில் போதை பொருள் கடத்தல் வழக் குகளில் தேடி வருகின்றனர். இதனால் அவர் இந்தியாவில் இருந்து தலைம றைவாகி தற்போது மியன்மார், டென் மார் உள்ளிட்ட நாடுகளில் பதுங்கி இருப்பதாக கூறப்படுகிறது. அதேநே ரம் ஜான் பிரிட்டோவை மத்திய போதை பொருள் தடுப்பு பிரிவு அதிகா ரிகள் தேடப்படும் குற்றவாளியாக அறி வித்து தேடி வருகின்றனர்.

இந்த வழக்குகள் போதை பொருள் கடத்தல் வழக்கு சிறப்பு நீதிமன்றங் களில் நடந்து வருகிறது. அதேநேரம் போதை பொருள் கடத்தலில் பல நூறு போடி சட்டவிரோதமாக பணம் பரி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இத னால் அமலாக்கத்துறை ஜான் பிரிட்டோ மற்றும் அவரது உறவினர் கள் மற்றும் கூட்டாளிகள் மீது வழக்கு பதிவு செய்து அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். அந்த வகையில் தான் கடந்த மே 26ம் தேதி அமலாக்கத் துறை இலங்கைக்கு சட்டவிரோத மாக ரூ.258 கோடி மதிப்புள்ள போதை பொருள் கடத்தியதாக பதிவு செய்யப்பட்ட 2 வழக்குகளில் தொடர் பாக ஜான் பிரிட்டோ கூட்டாளிகள் வசிக்கும் சென்னை மற்றும் ராமநா தபுரத்தில் சோதனை நடத்தினர். 5 இடங்களில் நடந்த சோதனை நடத்தி முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய் தனர். குறிப்பாக சோதனையில், ஜான் பிரிட்டோ போதை பொருள் விற் பனை மூலம் கிடைத்த பல நூறு கோடி பணத்தை தனது ரத்த உறவி னர்கள் மூலம் சட்டவிரோதமாக அவர்கள் நடத்தும் நிறுவனங்களில் முதலீடு செய்து இருந்த ஆவணங்கள் சிக்கியதாக தற்போது தகவல் வெளி யாகி உள்ளது.

**ஜாமினில் வெளிவந்த ஆதவ் அர்ஜுனாவின் மனைவி!**

அதேநேரம், கடந்த 2018ம் ஆண்டு போதை பொருள் கடத்தல் மன்னன் ஜான் பிரிட்டோ போதை பொருள் விற்பனை மூலம் கிடைத்த பல ஆயிரம் கோடி பணத்தை சட்டவி ரோதமாக வெளிநாடுகளில் உறவி னர்கள் நடத்தும் நிறுவனங்கள் மற் றும் அவர்கள் பெயரில் முதலீடு செய்து இருந்தது அமலாக்கத்துறை விசார ணையில் தெரியவந்தது. இதுதொடர் பாக நடந்த சோதனையிலும் சட்டவி ரோதமாக ஜான் பிரிட்டோ பணத்தை தனது உடன் பிறந்த சகோதரியான லீமா ரோஸ் மார்ட்டின்(54), தனது சகோதரியான லீமா ரோஸ் மார்ட்டின் மகளான சென்னை ஆழ்வார் பேட்டை வீனஸ் காலனி மஹாராணி சின்னம்மா சாலையில் வசித்து வரும் டெய்சி ஆதவ் அர்ஜுனா(30) மற்றும் உறவினர் ஜான் கென்னடி ஆகியோர் பினாமியாக இருந்து வந்ததும், அதற் கான ஆவணங்களும் சிக்கியதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அமலாக்கத்துறை வழக்கு கேரளா மாநிலம் எர்ணாகு ளம் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. அப்போது சட்டவிரோத பணப்பரிமாற் றம் தொடர்பாக போதை பொருள் கடத் தல் மன்னன் ஜான்பிரிட்டோ, அவரது சகோதரி லீமா ரோஸ் மார்ட்டின், லீமா ரோஸ் மார்ட்டின் மகளான டெய்சி ஆதவ் அர்ஜுனா, உறவினர் ஜான் கென்னடி ஆகியோர் இந்த வழக்கில் தொடர்புடையவர்கள் என்று தெரிய வந்தது.

அதைத்தொடர்ந்து எர்ணாகுளம் சிறப்பு நீதிமன்றம் ஜான் பிரிட்டோ, சகோதரி லீமா ரோஸ் மார்ட்டின், மகள் டெய்சி ஆதவ் அர்ஜுனா, ஜான் கென்னடி ஆகியோர் வெளிநாடுகள் தப்பி செல்ல முடியாத படி அவர்களின் பாஸ்போர்ட்டுகளை முடக்கி நடவ டிக்கை எடுத்தது. மேலும், இந்த வழக் கில் லீமா ரோஸ் மார்ட்டின் மற்றும் அவரது மகள் டெய்சி ஆதவ் அர் ஜுனா ஆகியோர் பல லட்சம் முன் வைப்பு தொகை செலுத்தி முன்ஜாமீனில் வெளியே வந்துள்ள னர். அப்போது எர்ணாகுளம் சிறப்பு நீதிமன்றம் லீமா ரோஸ் மார்ட்டின் அவரது மகள் டெய்சி ஆதவ் அர் ஜுனா ஆகியோர் நீதிமன்ற நிபந்த னைகளை மீறி வெளிநாடுகள் சென் றால் அவர்களை கைது செய்ய அமலாக்கத்துறைக்கு அதிகாரம் வழங்கி உத்தரவிட்டது.

அவசர தேவைக்கு வெளிநாடு செல்ல வேண்டி இருந்ததால், ரூ.1 லட் சம் நிபந்தனை தொகை செலுத்தி விட்டு நீதிமன்ற உத்தரவுப்படி செல்ல லாம் என்று நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது. இதற்கிடையே, தற் போது அ.தி.மு.க. சார்பில் தற்போது நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் லீமா ரோஸ் மார்ட்டின் லால்குடி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். லீமா ரோஸ் மார்ட்டின் மகள் டெய்சியின் கணவரான ஆதவ் அர்ஜுனா த.வெ.க. கட்சி சார்பில் சென்னை வில்லிவாக்கம் தொகுதி யில் போட்டியில் வெற்றி பெற்றார். தற்போது டெய்சியின் கணவர் ஆதவ் அர்ஜுனா த.வெ.க. தலைவர் விஜய் தலைமையிலான அமைச்சரவை யில் சிறிய துறைமுகங்கள், நெடுஞ் சாலை, பொதுப்பணித்துறைகளின் அமைச்சராகவும் உள்ளார்.

இந்நிலையில், மத்திய போதை பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் தேடப்பட்டு வரும் போதை பொருள் கடத்தல் மன்னன் ஜான் பிரிட்டோ வின் உடன் பிறந்த சகோதரி லீமா ரோஸ் மார்ட்டின், அவரது சகோதரி யின் மகள் டெய்சி ஆதவ் அர்ஜுனா ஆகியோர் வெளிநாடுகள் செல்ல வேண்டி கேரளா மாநிலம் எர்ணாகு ளத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் தங்களது பாஸ்போட்டுகள் விடுவிக்க கோரி மனுதாக்கல் செய்துள்ளனர். அப்போது தான் லீமா ரோஸ் மார்ட் டின், அவரது மகள் டெய்சி ஆதவ் அர் ஜுனா ஆகியோருக்கும் சர்வதேச போதை பொருள் குற்றவாளியான ஜான் பிரிட்டோவுக்கு உள்ள ரத்த உற வுகள் என்ன என்பது குறித்து வெளிச் சத்துக்கு வந்துள்ளது.

**அதிகாரபூர்வமாக நீரூபணம்!**

லீமா ரோஸ் மார்ட்டின் லால்குடி தொகுதியில் போட்டியிட்ட போது தனது வின்ணப்பத்தில் தன் மீது 4 வழக்குகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அதில் தனது சகோதரன் மற்றும் மகள் மீது உள்ள சட்டவிரோத பணப்பரி மாற்றம் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்ட குற்ற எண் 533, 2018 வழக்கை முதல் வழக்காக குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் சர்வதேச போதை பொருள் கடத்தல் மன்னன் ஜான் பிரி டோவுக்கும் லீமா ரோஸ் மார்ட்டின் அவரது மகள் டெய்சி ஆதவ் அர் ஜுனா தொடர்புகள் அதிகாரப்பூர்வ மாக நீரூபணமாகி உள்ளது.

**சமூக ஆர்வலர்கள் கேள்வி!**

தமிழகத்தில் முதல்வராக உள்ள த.வெ.க. தலைவர் விஜய், மாநிலத் தில் மூளை முக்கு எல்லாம் போதைப் பொருட்கள் பரவி கிடக்கிறது அதை தடுக்க போதை பொருள் தடுப்பு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது என்று தெரி வித்து வருகிறார். தவெக அரசில் அமைச்சராக உள்ள ஆதவ் அர்ஜுனா வின் மனைவி டெய்சி மற்றும் அவ ரது மாமியாரும் அ.தி.மு.க. லால்குடி சட்டமன்ற உறுப்பினரான லீமா ரோஸ் மார்ட்டின் மீது போதை பொருள் மூலம் கிடைத்த பணம் தொடர்பாக அமலாக்கத்துறை பதிவு செய்துள்ள சட்டவிரோத பணப்பரி மாற்றம் வழக்கில் முக்கிய குற்றவாளி யாக இருந்து வருகின்றனர். உண்மை இப்படி இருக்க முதல்வர் விஜய் எப்படி தமிழகத்தில் போதை பொருள் ஒழிக்க போகிறார் என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

**வழக்கை மீண்டும் கையிலெடுத்த அமலாக்கத் துறை!**

ஒன்றிய பா.ஜ.க. அரசு, தவெக காங்கிரசுடன் கூட்டணி அமைத்துள் ளதால், த.வெ.க. அரசுக்கு நெருக்க டியை அளிக்கும் வகையில், கடந்த இரண்டரை ஆண்டுகளாக கிடப்பில் இருந்த போதை பொருள் கடத்தல் மன்னன் ஜான் பிரிட்டோ மற்றும் அவ ரது உறவினர்கள் மீதான போதை பொருள் கடத்தல் வழக்கு மற்றும் அம லாக்கத்துறை வழக்குகளை மீண்டும் கையில் எடுத்துள்ளது. இதனால் அம லாக்கத்துறை சட்டவிரோத பணப்பரி மாற்றம் வழக்கில் தவெக அரசின் அமைச்சராக உள்ள ஆதவ் அர்ஜுனா மனைவி டெய்சி மற்றும் அவரது மாமியாரான அ.தி.மு.க. லால்குடி எம்.எல்.ஏ. லீமா ரோஸ் மார்ட்டின் ஆகியோர் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்று டெல்லி வட்டா ரத்தில் இருந்து தகவல் கசிந்துள்ளது. இந்த சம்பவத்தால் தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

போதை பொருள் நடமாட்டத்தை தடுக்க, போதை பொருள் தடுப்பு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது என்கிறார் முதல்வர் விஜய். ஆனால் த.வெ.க. அரசில் அமைச்சராக உள்ள ஆதவ் அர்ஜுனாவின் மனைவி டெய்சி, மாமியார் லீமா ரோஸ் எம்.எல்.ஏ. மீது போதை பொருள் மூலம் கிடைத்த பணம் தொடர்பாக அமலாக்கத்துறை பதிவு செய்துள்ள வழக்கில் முக்கிய குற்றவாளியாக இருந்து வருகின்ற னர். பின் எப்படி தமிழகத்தில் போதை பொருளை விஜய் ஒழிக்கப் போகிறார் என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

**-நன்றி 'தினகரன்' 9.6.2026**

## மின்துறை அதிகாரியை விசாரிக்காமலேயே

# செருப்பால் அடிப்பேன் என்கிறார் அமைச்சர்!

## ஜோசப் விஜய் சார்! நடவடிக்கை உண்டா?

காஞ்சிபுரம், ஜூன் 10-

I'd have hit him with footwear: Min threatens to transfer EB official

காஞ்சிபுரம் மாவட்டம் நாரப்பாக்கம் பகுதி யில் உள்ள மின்துறை அதிகாரி ஒருவரை அவரைப்பற்றி விசாரிக்காமலே செருப்பால் அடிப்பேன் என்று வனத்துறை அமைச்சர் ரஞ்சித்குமார் குறிப்பிட்டுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் நாரப்பாக்கம் பகுதி யில் த.வெ.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அமைச்சராக பொறுப்பேற்றிருப்பவர் ரஞ்சித்குமார்.

அவர் இரு தினங்களுக்கு முன்னர் அப் பகுதியில் நன்றி தெரிவிக்கும் கூட்டங்களில் பங்கேற்றார். அப்போது அங்கிருந்தவர்கள், அவரிடம் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு சொல்லொணா துயருக்குள்ளாவதாக புகார் அளித்தனர்.

ரஞ்சித்குமாரும் உடனடியாக அங்கிருந்து மின்வாரிய உயர் அதிகாரிக்கு (மேற்பார்வை பொறியாளர்) அலைபேசியில் அழைத்து மின்வெட்டு குறித்து கேட்டார். அப்போது அவர் உரையாடலை பொதுமக்களும் கேட்கும் வண்ணம் செல்போனை ஸ்பீக்கரில் வைத்திருந்தார்.

அப்போது எதிர் முனையில் பேசிய அதிகாரி, தன் கட்டுப்பாட்டில் உள்ள இளம் அதிகாரி மீது புகார் கூறியிருக்கிறார்.

அப்போது அமைச்சர் ரஞ்சித்குமார், அந்த அதிகாரியை உடனடியாக நான் கன்னியா குமரிக்கு மாற்றிவிடுகிறேன் என்று கூறி விட்டு, பொதுமக்களை நோக்கி, ஸ்பிக்கர் போனுடன் மைக்கை நீட்டி, இப்போது அந்த அதிகாரி மட்டும் இங்கிருந்தால் அவரை நான் செருப்பால் அடித்திருப்பேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். (ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிலும் அவ்வாறு செய்தியும் வந்துள்ளது)

குற்றம் சாட்டிய அதிகாரி பற்றியும் விசாரிக் காமல், குற்றம் சாட்டப்பட்ட அதிகாரியைப் பற்றியும் விசாரிக்காமல், 'செருப்பால் அடிப் பேன்' என்று துறை அதிகாரி மீது சொல்லும் அளவு அமைச்சருக்கு அதிகாரம் உள்ளதா?

ஜோசப் விஜய் சார்; நீங்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

## மறைந்த தீரர் ஜெ.அன்பழகன்

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி அமைதிப் பேரணி!

## பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி. - கோ.சு.மணி அறிக்கை!

சென்னை, ஜூன்.10 –

சென்னை மேற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் மறைந்த மாவீரன் ஜெ.அன்பழகன் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அமைதிப் பேரணி இன்று (10.06.26) காலை 7.00 மணி அள வில் சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. தலைமையில் தியாகராயர் நகர் மனமகிழ் மன்றத் திலிருந்து புறப்பட்டு மாவீரன் தீரர் ஜெ.அன்பழகன் நினைவிடத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு மற்றும் கழகத் தோழர்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்துகிறார்கள்.

எனவே இந்த அமைதி பேர ணிக்கு மாநில மாவட்ட நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப் பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள், ஆற்றல்மிக்க செயல்வீரர்கள், வீராங்கனைகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பகுதிச் செயலாளர் கள் கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி கேட்டுக்கொள் கிறார்கள்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் மக்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களைப் பெற்று கொண்டார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் மற்றும் பொது மக்கள் உடன் கலந்து கொண்டனர்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கடலூர் கி. கோவிந்தராசன்

ஜூன் 10 (1998)

கடலூர் நகரத்தில் தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் – திராவிடர் கழகம் இவற்றில் துவக்கக் கால உறுப்பினராக இருந்ததைத் தொடர்ந்து, தி.மு.கழகத்திலும் ஆரம்பகால உறுப்பினரானார்.

கடலூர் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 40 ஆண்டுகாலம் பணியாற்றியவர்.

நேருவுக்கு கருப்புக் கொடி, மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் ஆகிய இப்போராட்டங்களில் பங்கேற்று கடுங்காவல் சிறைதண்டனை பெற்றவர்.

தந்தை பெரியாரின் சீடராக – பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக – தலைவர் கலைஞரின் உற்ற உடன்பிறப்பாக விளங்கியவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் கரத்தால் மிதிவண்டி பரிசு பெற்று, "அடிமட்டத் தொண்டனை கழகம் மதிக்கத் தவறாது" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.


## அ.குப்பன் தலைமை! வினோத் வேலாயுதம் முன்னிலையில்

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் சமபந்தி விருந்து!

## நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி, அன்பகம் கலை, மரு.எழிலன் பங்கேற்பு!

சென்னை ஜூன் 10–

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தி.மு.க.சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, சமபந்தி விருந்து வழங்கும் நிகழ்ச்சி இன்று (10.6. 2026 – புதன்கிழமை) மதியம் 12 மணி அளவில் மேற்கு நமச்சிவாய புரம், கூளைமேடில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு பகுதி கழகச் செய லாளர் வினோத் வேலாயுதம் முன் னிலை வகிக்கிறார். அ. குப்பன் தலைமை ஏற்கிறார்.

கா.சிட்டிபாபு, சு சண்முகம், ஜி. இளங்கோ, எம் தியாகராஜன், ஆர். முனிரத்தினம், ஆர்.சி. தாமஸ் ரைட், எம் அண்ணாமலை, திருவை ஆர். கோபி, எஸ்.கே.பழனி, டி. பாலன், ஆர்.ஆதில் அகமது, ஆர்.எம். உமா தேவி, வி.தீபா, பா. ஜெயராணி, எஸ். மேட்லின் மேரி, கே கனகா, பா.ஜீவா, எஸ். ஜீவரத்தினம், விஜயா பாபுஜி ஆகியோர் வரவேற்புரையாற் றுகின்றனர்.

நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் பெருநகர மாநகராட்சி பணிக்குழு தலைவர் நே.சிற்றரசு, கழக இணை அமைப் புச் செயலாளர் அன்பகம் கலை, கழக மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் ஆகி யோர் சமபந்தி விருந்து வழங்கி உரையாற்றுகின்றனர்.

இதில் து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின்பாபு, நுங்கை வி.எஸ். ராஜ், டி.ஜோஸ் டேனியல், எம்.டி.ஆர். நாதன், ப.பிரகாஷ், துபாய் விஜய், யோகேஸ்வரி சுந்தரே சன், மு.சீனிவாசன், ஜி.வி. சரவ ணன், டாக்டர் ஜீவகன் அய்யநாதன், எம்.டி.ஆர். சாரதி மணிமாறன், ச. அசோக்குமார், டி.எஸ்.ராஜா, திரு மலை பொண்ணுரங்கம் எம்.சி., ரெட்சன் சி.அம்பிகாபதி, லதா பிளா ரன்ஸ், எலிசபெத் அகஸ்டின், MC புவி பாலாஜி, இதயத்பாஷா, ஸ்டர் லிங் மோகன், பா. கமலக்கண்ணன், ஆர்.பொன்னம்மாள், வா.கணேசன், வரதை த.பரி, ச.டேவிட் இன்பராஜ், மு.மோகன், த.குணசேகரன், தினேஷ்பிரபு என்.மோகனவேல், கே. குட்டி, இம்ரான், வழக்கறிஞர். கே. வெங்கடேஷன், ஜெ. இருதயநா தன், ஜஸ்டின், பிரசன்னா, கமலக் கண்ணன், டாக்டர்.ஆ.திரு முருகன், க.தங்கமணி, ஆரோன் பிலிக்ஸ், கே.எல்.எம். மணி, டி.செல்வி கோ. தட்சிணாமூர்த்தி, என்.இ.சரவணன், பா.சுரேஷ், ஆர். சீனிவாசன், எம்.டி. ஆர்.புகழ், வி.என்.பாபு, த. ஜசன்ட், எஸ். பார்த்திபன் வி.வேல்குமார், எஸ். அருண்குமார், ப.ஜெயந்தி, செ.பா.ஜான்சன், ஐ.ராஜதுரை, வெ.சுரேஷ், காந்தி (எ) ரா.ராஜேஷ், சீ.தனுஷ்கோடி ஆதித்தன், மு.லோக நாதன், முரசொலி ஆர். ஸ்ரீதர், ஆர். பா. ராம்குமார் முகவை மு.நடராஜன், பால்சுதாகர், கஜலெட்சுமி, பத்மநா பன், ரஞ்சித், பவானி, சித்ரா, லதா பிரசன்னா, டெல்பினா 109 வது வட்ட கழக நிர்வாகிகள் பாஷாகுமார், ஏ. வெங்கடேசன், ச.ராசுக்குமார், ஜி.ஆர்.மூர்த்தி, ஆரோக்கியதாஸ், ஆட்டோ ஏழுமலை, பழனி, மதியழ கன், தம்பிதுரை, சுகுமார்பாஸ்கர், வே. வெங்கடேசன், கந்தன், முனி யாண்டி, டேவிட், மாரிமுத்து 109 அ வட்ட கழக நிர்வாகிகள் இரா.முத்துகு மார், விஜயகுமார், ராஜா, மாலா, வாஞ்சிநாதன், கோவிந்தராஜன், நீல கண்டன், சேகர், சு.நைனியப்பன், சுப்பிர மணியன் உள்ளிட்ட கழகத்தி னர் பங்கேற்கின்றனர். எஸ்.செல்வ குமார், ஆர்.பாலாஜி ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மும்பை த.மு. பொற்கோ

ஜூன் 10 (2014)

இளம்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

மும்பையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் சென்று கொள்கை வகுப்பு நடத்த உற்சாகத்தோடு உழைத்ததன் பயனாக மும்பைத் தமிழர்களின் நண்பராய், குடும்பத்தில் ஒருவராய் மதிக்கப்பட்டவர்.

1965ல் மகாராஷ்டிராவில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது,அவர்களுக்காக போராடியவர். அதேநேரத்தில் பால்தாக்கரே அவர்களுடன் நட்பு வைத்திருந்தவர். அதே பால்தாக்கரே, 2002ல் ஓர் விழாவில் 'சமுதாயச் செம்மல்' என்ற பட்டம் வழங்கி பாராட்டினார். 'தமிழர் நல உரிமைக் கூட்டமைப்பு', 'தென்னகப் பயனாளிகள் கூட்டமைப்பு' ஆகிய அமைப்புகளை தொடங்கி, அதன் தலைவராக இருந்து மும்பைத் தமிழர்கள் நலனுக்காக பாடுபட்டவர்.

"த.மு. பொற்கோ அவர் மும்பை மாநகரச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில், என்னை அழைத்து பல நிகழ்ச்சிகளை நடத்தியதும், கழகத்திற்காக தேர்தல் நிதி திரட்டிக் கொடுத்ததும் என் நினைவுக்கு வருகிறது" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.